RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2023

# மனித நேயத்தையும், தேசப்பற்றையும் வளர்க்கும் 'ஆத்மாவின் ராகங்கள்'

பாத்திமா மேரி சில்வியா [அ, *], ம. அன்பரசு [ஆ]

[அ] ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம், தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] தமிழ்த்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# 'Aanmavin Raagangal', A catalyst to provoke Humanitarianism and Patriotism

R. Fatima Mary Sylvia [a, *], M. Anbarasu [b]

[a] Librarian, Jayaraj Annapackiam College for Women, Periyakulam - 625 601, Tamil Nadu, India.
[b] Department of Tamil, Arul Anandar College, Karumathur - 625 514, Tamil Nadu, India.

Corresponding Author:
sylvia.jmj@gmail.com

Received : 03-01-2020
Accepted : 10-02-2020

**ABSTRACT**

A song sung by a soul which sacrificed himself publicly for the freedom of India and by the soul which sacrificed herself privately for the freedom of India is the centre and apex of the Novel 'Aanmavin Raagangal'. The sweet characters of these two souls kindle us to read this novel continually. From this Novel, we can clearly understand the Patriotism and Humanitarianism of the author, Na. Parthasarathy. This novel portrays the nature of selfless people in the period of freedom struggle of India and the selfish people of the corrupted politics at present. The study calls us to get rid of all social evils at present and also insist us to imbibe the patriotism and humanitarianism.

**Keywords:** Patriotism, Humanitarianism, Sacrifice, Mahatma Gandhi, Politics

## ஆசிரியரைப் பற்றி

**முனைவர் அருட்சகோதரி பாத்திமா மேரி சில்வியா** கடந்த 18 ஆண்டுகளாகக் கல்லூரி நூலகராகப் பணியாற்றுகிறார். இவர் சிறந்த ஆளுமைப்பண்புடன் இளையோரை வழிநடத்துவதால் நூலகப்பணியோடு கல்லூரி உதவி முதல்வராகவும், விடுதி மாணவிகளின் இயக்குநராகவும் பணியாற்றியதோடு, தற்போது என். எஸ். எஸ். திட்ட அலுவராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வருகிறார். இறையன்பும், மக்கள்மேல் அன்பும் கொண்டு அன்பும், அமைதியும், மகிழ்வும் நிறைந்த நல்சமுதாயத்தைப் படைக்க ஆய்வுகள்

பல மேற்கொண்டு வருபவர். 'மகிழ்வோம் பிறரை மகிழ்விப்போம்' என்ற தலைப்பில் இரண்டு வருடங்களாக, வாரந்தோறும் காணொலி காட்சி வழியாக நற்செய்திகளை வழங்கி வருகிறார்கள்.

**முனைவர் ம. அன்பரசு**, துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர். இவர் கடந்த 13 ஆண்டுகளாக தமிழ்த்துறையில் பணியாற்றி வருகின்றார். மூன்று ஆண்டுகள் துறைத்தலைவராக இருந்து தமிழ்த்துறையை வழிநடத்தினார். பின் விடுதி இயக்குநராக 9 ஆண்டுகளும் நான்கு ஆண்டுகளாக துணை முதல்வராகவும் பணி செய்திருக்கிறார். தற்பொழுது கல்லூரியின் கிராமப்புற பணிகளின் இயக்குநராகவும், அய்க்கப் என்ற மாணவர் இயக்கத்தின் ஆலோசகராகவும், கல்லூரியின் முன்னால் மாணவர் மன்றத்தின் இயக்குநராகவும் பணியாற்றி வருகின்றார்.

## கட்டுரைச் சுருக்கம்

ஊரறிய, ஊலகறிய நாட்டுக்குத் தியாகம் செய்த ஒருவரின் ஆன்மாவும், உலகறியாமல் அந்தரங்கமாக நாட்டுக்குத் தியாகம் செய்த ஒருத்தியின் ஆன்மாவும் மீட்டிய ராகங்கள், 'ஆன்மாவின் ராகங்கள்' எனும் தலைப்பிலான இந்நாவலுக்கு மையமாகவும், மகுடமாகவும் அமைந்துள்ளது. இவ்விரு ஆன்மாவின் இனிய பண்புகள் இந்நாவலைத் தொடர்ந்து படிப்பதற்கான ஆவலைத் தருகின்றன. ஆசிரியர் நா.பார்த்தசாரதியினுள் புதைந்துள்ள மனிதநேயமும், தேசப்பற்றும் இந்நாவல் வழியாக கண்டுகொள்ள முடிகிறது. சுதந்திரப் போராட்டக் காலத்து மனிதர்கள், சுதந்திரத்திற்குப் பிந்தைய இக்கால மனிதர்கள் என்று இரண்டு சகாப்த மனிதர்களின் வாழ்க்கை நிலைகளை இந்நாவல் சுட்டிக்காட்டுகிறது. சுதந்திரத்திற்காய் எண்ணற்ற தியாகங்களைச் செய்த தியாகச்செம்மல்களின் வாழ்க்கையை உற்றுநோக்கி, இன்றைய சமூகத்தில் புரையோடியுள்ள சுயநல அரசியலைக் களையவும், மனிதநேயத்துடன் தேசபக்தி மிக்கவராய் வாழவும் அறிவுறுத்துகிறது இவ்வாய்வு.

## குறிப்புச் சொற்கள்

தேசப்பக்தி, மனிதநேயம், தியாகம், விடுதலை, சுதந்திர வேட்கை, மகாத்மா காந்தி, அஹிம்சை, சுயநல அரசியல்.

## முன்னுரை

மக்கள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும், மக்களால் அதிகம் விரும்பப்படும் ஒரு இலக்கிய வடிவம் புதினம் அல்லது நாவால். திரு. நா. பார்த்தசாரதி எழுதிய 'ஆத்மாவின் ராகங்கள்' எனும் நாவல், காந்தீய சகாப்த நாவல் என்றும் அழைக்கப்படுகிறது. தியாகமும், தேசபக்தியும், மனித நேயமும் உயிர்மூச்சாகக் கொண்ட சுதந்திர வேள்வித் தீயில் கலந்திருந்த ஆன்மா, சுதந்திரத்திற்குப்பின் பதவிகளின் சுயநல ஆசை அதிகரித்த காலத்தில், தனியே விலகி வாழ்ந்த தேசபக்தரின் கதை இது. இந்நாவல் இந்திய தேசத்தின் சுதந்திர

வரலாற்றையும், பலதியாகிகளின் தேசப்பற்றையும், தியாகவாழ்வையும், தேசபக்திமிகுந்த ஆன்மாவின் தூயகாதலையும், இக்கால சுயநல அரசியலையும் அனைவருக்கும் எடுத்துரைக்கிறது.

## இந்திய தேசத்தின் சுதந்திர வரலாறு

இந்திய தேசத்தின் சுதந்திர வரலாற்று நிகழ்வுகள் பல, அது நடைபெற்ற காலம் ஆண்டு, மாதம், தேதியுடன் மிகவும் விளக்கமாக இந்நாவலில் தரப்பட்டுள்ளதன் வழியாக இந்திய தேசத்தின் சுதந்திர வரலாற்றையும் இந்நாவல் வழியாக எளிதில் ஆர்வமுடன் கற்றுக்கொள்ள முடிகிறது. சிறப்பாக காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற காந்தி இர்வின் உடன்படிக்கை, சத்தியாகிரகப் போராட்டம், சுதேசி இயக்கம் மற்றும் காந்தியடிகள் பாரிஸ்டருக்கு படித்துவிட்டு பணம் சம்பாதிக்காமல், இந்திய தேசத்துக்காக நாட்டுப்புற விவசாயியைப்போல் ஒற்றை ஆடையை உடுத்திக்கொண்டு அஹிம்சை வழியில் போராடி நாட்டிற்கு விடுதலை வாங்கித்தந்த வரலாறு மிகவும் உருக்கமாக படிப்பவர் நெஞ்சை உருக்கும் வதையில் தரப்பட்டுள்ளது. சுதந்திர பெற்ற பின் பாரத நாடு இந்தியா, பாகிஸ்தான் எனும் இரண்டு நாடுகளாக பிரிந்த வேதனையை தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்த உண்மை தேசபத்தர்களின் நிலையும், மற்றும் மகாத்மா காந்தியின் இறப்பும் கண்ணீர் வரும்வகையில் உருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சுதந்திரத்திற்காக தொடங்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளும், மகாத்மாவுக்குப்பின் ஆன்ம பலத்திலும், சத்தியத்திலும், தொண்டு செய்வதிலும் பெரியவராகத் திகழ்ந்த விநோபாவேயின் சொற்பொழிவுபற்றியும் இங்நாவலில் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு பல வரலாற்றுச் செய்திகளை அனைவரும் எளிதில் அறிந்து கொள்ள, மனதில் நிறுத்த இந்நாவல் உதவுகிறது (Paul Greenough, 1999).

## தேசப்பற்று

கதர்துணிகளை பாரதியின் பாடலை பாடிக்கொண்டு தெருத்தெருவாய், கிராமம் கிராமமாய் சுமந்து சென்று விற்றது, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காய் கிடைத்த சிறைவாச துன்பத்தை பந்த பாசக்கவலையில் சில நாட்கள் கூட இழக்க விரும்பாத நெஞ்சுரம் ஆகிய நிகழ்வுகள் இந்நாவலை படிப்பவர்களை மெய்சிலிர்க்கவைக்கிறது. அந்நிய நாட்டுப்பொருட்களின் மேல் உள்ள மோகத்தை வெட்கிக்குருகி நிறகச்செய்கிறது. தேசத்தின் விடுதலைக்காய் சிறையில் இருந்த அனைவருமே தாய், தந்தை, குடும்பம் முழுவதையும் விட்டுவிட்டு வந்து, பாரதம் என்ற ஒரு பெரிய தாயின் வேதனைக்காய், தங்களைப் பெற்றெடுத்து வளர்த்த சிறிய தாய்மார்கள் பலர் வேதனைப்படலாமென்று எண்ணி ஆறுதலடைந்தனர் என்பதும் ஈன்ற தாயினும் மேலான தாயாக, தாய்திருநாட்டைக் கருதிய மகான்களின் தேசப்பற்றை வியந்து போற்றவைக்கிறது. இவையனைத்தும் இன்றைய மனிதர்கள் பெற்ற தாய்க்கும், தாய்த்திருநாட்டிற்கும் காட்டுகின்ற அன்பையும், மதிப்பையும், தியாகத்தையும் பற்றிச் சிந்தித்து சீர்செய்ய உந்தித்தள்ளுகிறது.

## மனிதநேயம்

மனிதம் அந்நாவலில் மதிக்கப்படுகிறது, ஏற்றுக்கொள்ளப்படுகிறது, போற்றப்படுகிறது. ஒவ்வொரு ஆசிரமவாசிகளும் பாரதமாதாவின் கழுத்தில் சூட்டப்படும் ஒவ்வொரு ரோஜாப்பூக்களாகப் வருணிக்கப்பட்டு, மனிதம் போற்றப்பபடுகிறது. கடவுள் மனிதனைத்தான் படைச்சார், மனிதனோ சாதிகளைப் படைத்து விட்டான், மனிதத்தன்மை உள்ளவங்க, மனிதத்தன்மை இல்லாதவங்கன்னு உலகத்திலேயே இரண்டு சாதி தான் இருக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள் அனைத்தும் சாதியவேறுபாடு கருதா மாண்பினைக் கொண்ட மனிதநேயத்தை அறிவுறுத்துகின்றன. இதைப்போன்று வெறுப்புக்கு அடிப்படை உதாசீனம், உதாசீனம் படிப்படியாக மனிதனை அரக்கனாக்குகிறது, கருணையோ படிப்படியாக மனிதனை தெய்வமாக்குகிறது என்ற சிந்தனையும் வெறுப்பு, கோபம், கொலை ஆகிய மனிதநேயமற்ற பண்புகளை விட்டகன்று, கருணை, அன்பு எனும் நற்பண்புகளால் மனிதநேயமுள்ள நல்வாழ்வு வாழ வழிகாட்டுகின்றன (Parthasarathi, 2012; Manikannan, 2019; Poneelan, 2019).

## ஆன்மாவின் தூயகாதல்

பக்தர்களின் கவலையைப் போக்கும் தெய்வங்களுக்கு இணையாக, தெய்வங்களின் கவலையைப் போக்கும் பக்தராக புன்னகையாலும், தியாகத்தாலும் நிறைந்த தெய்வீகம் கலந்த தூயகாதலும் இந்நாவலில் மையம் கொண்டுள்ளது. தேசம் சுதந்திரமடையறவரை எந்த பெண்ணின் கையும் இந்த சரீரத்தில் படவிடுவதில்லை என்று சத்தியம் பண்ணியிருக்கேன் என்று கூறி காதலைவிட சுதந்திரமே முதன்மையானது என்பதை தெரிவிக்கும் மனப்பாங்கு காதலை கட்டுப்பாட்டுடன் கூடிய அன்பின் வெளிப்பாடாக வெளிப்படுத்தி காதலின் தூய்மையை சிறப்பிக்கிறது. உங்களை ஜெயிக்கிற நோக்கம் எனக்கில்லை, என் தவமே உங்களுக்காக சகலத்தையும் தோற்கணும்கிறதுதான், என்ற காதலியின் சொற்கள் உண்மை அன்பின் தன்மைகளை வெளிப்படுத்துவதோடு, முறையற்ற காதலினால் வசப்பட்டிருக்கும் இன்றைய இளையோரின் உள்ளத்தை சுடும் விதத்திலும் உள்ளது.

## இக்கால சுயநல அரசியல்

சமூகத்தில் புரையோடியுள்ள சுயநல அரசியலின் ஒருசில அம்சங்கள் இங்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. பரிபூரண குடியரசு அந்தஸ்து பெற்றுவிட்ட இன்றைய இந்தியாவில் வெளிநாட்டு உறவுப் பிரச்சனையில் காஷ்மீரும், உள்நாட்டு உறவு நிலைகளில் மொழியும் நிரந்தரமான தடைகளாக நின்றன என்று கூறும் இந்நாவல் மொழி வேறுபாட்டை வேரறுத்து, அண்டை நாட்டோடு நல்உறவுடன் வாழ அமைதிக்கான வழிகளைச்செய்ய அழைப்பு விடுக்கிறது. சத்தியாக்கிரகத்துக்கு தன்னையே கொன்றுகொள்ளும் பலம் வேண்டுமென்று கூறி மகாத்மா காந்தி பெற்றுத்தந்த சுதந்திரம், தன்தேவையை அடையப் பிறரைக் கொல்லலாம் என்று நினைக்குமளவுக்கு மாறியிருக்கிறதைக் கண்டு வருந்தச்

செய்கிறது இந்நாவலின் இறுதிப்பகுதி. சுதந்திரம் பெறுமுன் வறுமையை, பசியை, அறியாமையை ஜெயிக்க வேண்டுமென்றிருந்த தாகம், இன்று தேர்தலில் ஜெயித்து தன் செல்வத்தைப் பெறுக்கும் ஆசையாக மட்டும் உள்ளதை சுட்டிக்காட்டி, நாட்டு மக்களின் வறுமையை, அறியாமையைப் போக்கி, மக்களிடையே உள்ள வேறுபாடுகளை வேரறுத்து வளமையான இந்தியாவை உருவாக்கும் ஆர்வமுள்ள தலைவர்கள் தேர்தலில் நின்று வெற்றிபெற வேண்டும் என்ற ஆன்மாவின் ஆவலை வெளிப்படுத்துகின்றது இந்நாவல்.

## முடிவுரை

மறுபடியும் பாரதமாதாவின் முகத்தில் புன்முறுவல் பூக்கச்செய்ய தேசப்பற்றும், மனிதநேயமும் நிறைந்த, தூய அன்பும், தியாகமும் கொண்ட ஆன்மாக்களை அழைக்கிறது இந்நாவல். இந்நாவலை வாசித்த ஒவ்வொருவரும், இவ்வழைப்பை நிறைவு செய்பவர்களாய் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. சமூக அக்கறையும், மனித மாண்பும் நிறைந்து வாழ்வோர், அதை பிறரில் உருவாக்க ஆவல்கொள்வாராயின், தங்கள் கருத்துக்களை நாவல் வடிவில் மக்களுக்கு வழங்கி மனித இதயங்களில் நல்மாற்றத்தை உருவாக்கி, நல்சமூகத்தை உருவாக்கிடவும், தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்திடவும் இவ்வாய்வு உதவியாய் உள்ளது.

## References

King, A.E., Intersectionality and the Changing Face of Ecofeminism, Ethics and the Environment 22 (2017) 63-87.

Manikannan, R., Marxism on the inside, International Research Journal of Tamil, 1 (2019) 29-35. https://doi.org/10.34256/irjt1944

Parthasarathi, N., (2012) Aanmavin Raagangal, Seethai Publication, Chennai. 4th Edition.

Paul Greenough, R., (1999), Political mobilization and the Underground Literature of the Quit Indian Movement, 1942-44, Social Scientist, 27, 11–47.

Ponneelan, (2019), Tamil Novels, Discovery Book Palace, 1st Edition, ISBN: 978-81-942420-4-8.

Susan Buckingham, Ecofeminism in the Twenty-First Century, The Geographical Journal, 170 (2004) 146-154.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License